# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 12, 2022

Weekly E-paper ● February 12, 2022




## உள்ளாட்சியில் நல்லாட்சி

## வாக்களிப்பீர் தி.மு.க. கூட்டணிக்கு

பொள்ளாச்சி மா. உமாபதி

### பட்டினப் பிரவேசமும், பார்ப்பனியமும்!!

வெற்றிச்செல்வன்

### "மதமா? நாடா?" உயர் நீதிமன்றம்!

தலையங்கம்

### இது எங்கள் உரிமைப் போர்

காசு. நாகராஜன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 12, 2022 Weekly E-paper ● February 12, 2022


# உள்ளாட்சியில் நல்லாட்சி வாக்களிப்பீர் தி.மு.க. கூட்டணிக்கு

## பொள்ளாச்சி மா. உமாபதி



பல்லாண்டு காலம் நடத்தப்படாத நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் இப்போது அறிவிக்கப்பட்டுத் தேர்தல் பரப்புரைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தி.மு.க ஆட்சிக் காலங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் எப்போதும் உரிய காலத்தில் நடைபெற்றுள்ளன. ஆனால் அதிமுக ஆட்சியில் எம்ஜிஆர் காலம் தொட்டு எப்போதுமே உள்ளாட்சித் தேர்தல்கள் முடிந்தவரை நடக்காமலும், தவிர்க்கமுடியாமலும் கட்டாயம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் போது தள்ளாட்டத்துடன் நடைபெற்றது என்பது வாடிக்கை.

1957 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க முதன்முதலாக போட்டியிட்டு 15 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றது. 1959ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில் வெற்றி வாகை சூடி மாநகராட்சியைக் கைப்பற்றியது. தி.மு. கழகத்தின் முதல் மேயராக அ.பொ. அரசு பொறுப்பேற்றார். அப்போதெல்லாம் மாநகராட்சியின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். அதில் மேயர்களின் பதவிக்காலம் ஓராண்டு மட்டுமே.

1977ஆம் ஆண்டு எம்ஜிஆர் ஆட்சி பொறுப்பேற்ற பின் 1986 வரை உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

1991ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. 1996ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்த பின் மீண்டும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்றன.

2006ஆம் ஆண்டு மாநகராட்சித் தேர்தலில் தி.மு.கழகம் மீண்டும் வெற்றி வாகை சூடி, மக்கள் தொண்டர் மா.சுப்பிரமணியம் மேயர் பொறுப்பினை ஏற்றார். 2011ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் சைதை துரைசாமி மேயராகத் தேர்வு செய்யப்பட்டார். 2016ஆம் ஆண்டு முதல் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

தேர்தல் தோல்வி பயத்தில் உள்ளாட்சித் தேர்தல்களைத் தவிர்த்து வந்தனர். தேர்தலை நடத்தச் சொல்லி வழக்குத் தொடர்ந்து ஒருவழியாக 2020ஆம் ஆண்டு கிராமப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதிலும் புதிதாக பிரிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் கிராமப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தாமல் தவிர்த்தனர்.

2021-இல் திமு கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் உடனடியாக நிறுத்தி வைக்கப்பட்ட 9 மாவட்டங்களில் கிராமப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அவற்றில் தி.மு.கழகம் மிகப் பெரும் வெற்றியைப் பெற்றது. இப்போது முதல்வர் ஸ்டாலின் நகப்புற உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த ஆணையிட்டுள்ளார்.

கொரோனாவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 4000 நிதிஉதவி உடன் 14 மளிகைப் பொருட்கள், பயிற்சி பெற்ற அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகப் பணி நியமனம்,

தமிழ்நாடு அரசுப் பணிகளில் தமிழர்களுக்கு மட்டுமே முன்னுரிமை தரும் வகையில் தமிழில் தேர்ச்சி பெறுவோருக்கு மட்டுமே அரசுப் பணி என உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த அதிமுக ஆட்சியில் வட மாநிலத்தவர் எளிதாக தமிழ்நாடு அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு பெற அதிமுக அரசு வாசல் கதவைத் திறந்து வைத்திருந்தது.

மருத்துவக்கல்லூரி உயர் படிப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை மோடியின் ஒன்றிய அரசு பறித்தபோது இபிஎஸ்சும் ஓபிஎஸ்சும் ஏனென்று கேட்கத் துணிச்சல் இன்றி வேடிக்கை பார்த்த நிலையில், கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் 27% இட ஒதுக்கீடு வழங்க பிரதமர் மோடியை முடிவெடுக்க வைத்தார். அதுமட்டுமல்ல அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 7.5% பொறியியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

மோடி அரசின் வேளாண் விரோதச் சட்டங்களை ஏற்கமாட்டோம் என்று துணிச்சலுடன் முடிவெடுத்து, ஓராண்டு காலத்திற்கும் மேலாகப் போராடி வருகின்ற வடமாநில விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினார். இதன் விளைவாக ஒன்றிய அரசு தனது கொடிய வேளாண் திட்டங்களைத் திரும்பப் பெற வைத்தது பெரும் சாதனையாகும். தொழில் துறையிலும் பல்வேறு வெளி மாநில, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தற்போது தமிழகத்தில் முதலீடு செய்து தொழில் தொடங்க ஆர்வம் காட்டுகின்றனர். கல்வி, வேலைவாய்ப்பு, வேளாண்மை, தொழில், மகளிர் முன்னேற்றம் என அனைத்துத் துறைகளிலும் நல்லாட்சி செலுத்தும் நம் முதல்வர் உள்ளாட்சியிலும் நல்லாட்சி தொடர நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி வருகிறார்.

சரியான முறையான குடிநீர் திட்டம் எதுவும் அதிமுக ஆட்சியில் எதிர்பார்க்க முடியாது. மழைநீர் வடிகால் வசதிகளும், சாக்கடை வடிகால் வசதிகளும் முறையாகத் திட்டமிடப்படாததால் மழைக்காலங்களில் மாநகர மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகினர்.

தெருவிளக்குகளில் பொருத்தப்பட்ட எல்இடி விளக்குகளில் பெரும் ஊழல் நடைபெற்றுள்ளதைத் திமுக பலமுறை அம்பலப்படுத்தியுள்ளது.

எனவே சீர்மிகு நிர்வாகம் மக்களுக்குக் கிடைக்க உள்ளூர்த் தேவைகளான சாலை வசதி, தெருவிளக்குகள் பராமரிப்பு, சாக்கடை வடிகால் மேம்பாடு போன்ற அடிப்படைத் தேவைகளைத் தமிழக அரசின் துணையோடு மிகச் சிறப்பாகச் செய்ய, உள்ளாட்சியில் நல்லாட்சி காண மதச்சார்பற்ற முற்போக்குத் தி.மு.க கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வது நமது கடமை. ●

# பொறுப்பாளர்கள் நியமனம்- 2022

## திருச்சி மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம்.

1) திருச்சி மாவட்டத் தலைவர் :

தோழர் வீ.மதியழகன்.

2) திருச்சி மாவட்டச் செயலாளர் :

தோழர் ஆ.மணிவண்ணன்.

3) திருச்சி மாவட்டப்பொருளாளர் :

தோழர் மீனாட்சிசுந்தரம்

4) திருச்சி மாவட்டத் துணைத்தலைவர் :

தோழர் ரங்கராஜ்

5) திருச்சி மாவட்டத் துணைச்செயலாளர்:

தோழர் மகேந்திரன்

6)திருச்சி மாநகரத் தலைவர்:

தோழர் து.கதிரேசன்

7) திருச்சி மாநகரச் செயலாளர்:

தோழர் பெ.இராஜேஸ்குமார்.

- ஆகிய தோழர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

## மகளிர் அணிப் பொறுப்பாளர்கள்

மாநிலச் செயலாளர்

1.மகாலெட்சுமி

செயற்குழு உறுப்பினர்கள் :

1. தோழர் விஜயலெட்சுமி, சென்னை.
2. தோழர் ஜனனி, சென்னை.
3. தோழர் பாரதி, சென்னை.
4. தோழர் தமிழ், திண்டுக்கல்.
5. தோழர் கிருபாநந்தினி, கோவை
6. தோழர் தேன்மொழி, பல்லடம்
7. தோழர் சாந்தி, மதுரை.
8. தோழர் திராவிடச் செல்வி, புதுக்கோட்டை
9. யாழ் அமுதா, புதுவை

- ஆகிய தோழர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

## வழக்கறிஞர் அணிப் பொறுப்பாளர்கள்.

மாநில வழக்கறிஞர் அணிச் செயலாளர்.

1. தோழர் இரா.இராஜா சுந்தர்ராமன்.

மாநில வழக்கறிஞர் அணிச் செயற்குழு உறுப்பினர்.

2. தோழர் அருள்தாசன், (சென்னை)
3. தோழர் கணேஷ் பாபு, (சென்னை),
4. தோழர் இராம வைரமுத்து ( மதுரை)
5. தோழர் மானேக்சா, (சென்னை)
6. தோழர் இளம்வழுதி,(திருவள்ளூர்)
7. தோழர் வெ.பிரபாகரன்,(கோவை)
8. தோழர் கலைவாணி (கரூர்)

ஆகிய தோழர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மண்டல / மாவட்டப் பொறுப்பாளர்கள் பின்னர் நியமிக்கப்படுவர்.

- சுப.வீரபாண்டியன், பொதுச் செயலாளர்

# பட்டினப் பிரவேசமும், பார்ப்பனியமும்!

**வெற்றிச்செல்வன்**

1973ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்களால் மனிதனை மனிதன் எடுத்துச்செல்லும் கை ரிக்சா இழுக்கும் முறை ஒழிக்கப்பட்டது. கை ரிக்சா உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு இலவசமாகச் சைக்கிள் ரிக்சாக்களும் வழங்கப்பட்டன. மனிதனை உட்கார வைத்து மனிதன் இழுத்துச் செல்லும் அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் இது நடந்து 50 ஆண்டுகள் ஆகப் போகிற நிலையிலும் பார்ப்பனியத்தின் பெயரால் மனிதனை மனிதன் தூக்கிச் சுமக்கும் அவலநிலை இன்றும் தொடர்கிறது.

மயிலாடுதுறையில் உள்ள திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் பட்டினப்பிரவேசம் என்ற பெயரில், பல்லக்கில் மனிதனை வைத்து மனிதன் சுமக்கும் சுயமரியாதை அற்ற இச்செயல் கடந்த 07.02.2022 அன்று நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வைத் தடுக்க வலியுறுத்தி, திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களால் காவல்துறைக்கு ஒரு கடிதம் அளிக்கப்பட்டு, புகார் செய்யப்பட்ட



நிலையிலும் காவல்துறையின் பாதுகாப்போடு பட்டினப்பிரவேசம் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. திராவிடர் கழகத்தின் கடிதத்திற்கு, பட்டினப்பிரவேசம் நிகழ்வு நடைபெறாது என்று காவல்துறையால் உறுதி அளிக்கப்பட்ட நிலையில் அவ்வுறுதி மீறப்பட்டுள்ளது. ஏமாற்று நாடகம் நடத்தப்பட்டுள்ளது. எதிர்ப்புத் தெரிவித்த திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்கராச்சாரியார்களே பல்லக்கில் வருவதை விட்டுவிட்ட நிலையில் ஆதீனங்கள் இவ்வாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தந்தை பெரியாரின் வழியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழக அரசின் கவனத்திற்கு இது போன்ற நிகழ்வுகள் கொண்டு செல்லப்படாமல் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறுவதாகத் தெரிகிறது. இத்தகைய நிகழ்வுகள் மீண்டும் நடைபெறா வண்ணம், பார்ப்பனியத்திற்குத் துணைபோகிய அதிகாரிகளைத் தமிழக அரசுக் கண்காணித்து அவர்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே பகுத்தறிவாளர்களின் கோரிக்கை. ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## "மதமா? நாடா?" உயர் நீதிமன்றம்!

எந்த ஒரு மத அடையாளமோ, மதமோ நமக்கு ஏற்புடையதன்று.

மதமா? நாடா? எதுவேண்டும் என்று காட்டமாகக் கேட்டிருக்கிறது கர்நாடக உயர் நீதிமன்றம்.

மதம் என்பது அபினுக்கு நிகரானது என்றார் காரல் மாக்ஸ். மது போதையை விட மத போதை மிகக் கொடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாடு பார்த்திருக்கிறது.

மக்கள் மனங்களில் மத போதையை ஏற்றிக் கலவரங்களை ஏற்படுத்தி வருபவை இந்துத்துவ அமைப்புகள்.

இந்திய அரசியல் அமைப்பு வழங்கியுள்ள உரிமையின் படி, இஸ்லாமிய மாணவிகள் ஜிஹாப் அணிந்து கல்விக் கூடங்களுக்கு வந்திருக்கிறார்கள், கருநாடகத்தில். இன்னும் சொல்லப் போனால் 1948க்குப் பின் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக அப்படித்தான் வந்திருக்கிறார்கள்.

அப்போதெல்லாம் கண்களை உறுத்தாத ஜிஹாப் ஆடை இப்பொழுது இந்து அமைப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு உறுத்திவிட்டது.

உடனே காவித் துண்டுகளுடன் போராட்டம், கலவரம், தடியடி, துப்பாக்கிச் சூடு வரை போய் விட்டது.

இது ஜிஹாப்புக்கு எதிரான போராட்டம் என்பதை விட, மதத்தின் பெயரால் தூண்டிவிடப்பட்ட போராட்டமாகவும், நீண்ட காலத்திற்குப் பின்னர் கல்லூரி வரை சென்று படிக்கும் பெண்களுக்கு எதிரான போராட்டமாகவும் இருக்கிறது. இதனால் அவர்களின் கல்வி எதிர்காலங்களில் பாதிக்கப்படும், என்பதையும் கவனிக்க வேண்டும்.

இந்தப் போராட்டத்தில் ஒரு சில மாணவர்களைத் தவிர பெரும்பாலும் வெளியில் இருந்து கொண்டு வரப்பட்டவர்களாகத் தெரிகிறார்கள். இது ஒரு திட்டமிட்ட செயல் என்பதும் தெரிகிறது.

இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏனைய மாநிலங்களில் பரவி விடாமல் இருக்க வேண்டும்.

ஆகவே மத போதையில் இருந்து மாணவர்கள் விலகி, அவர்களின் கல்வி தொடரவும், அமைதி நிலவச் செய்வதும் மாநில, ஒன்றிய அரசுகளின் கடமையாகும்.

## செயல்வீரர்கள் கூட்டம்- திருச்சி



திருச்சி மண்டலச் செயல் வீரர்கள் கூட்டம் திருச்சியில் 5.2.2022 அன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் இருதுணைப் பொதுச்செயலாளர்களான தோழர் ஆ.சிங்கராயர், தோழர் சிற்பி செல்வராஜ், மாநில அமைப்புச் செயலாளர் தோழர் ப.புலேந்திரன், திருச்சி மாவட்டச் செயலாளர் ஆ.மணிவண்ணன், திருச்சி மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரவீன், புதிதாகப் பேரவையில் இணைந்த புதுக்கோட்டைத் தோழர் முத்துலட்சுமி உள்ளிட திருச்சி மண்டல மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## செயல்வீரர்கள் கூட்டம்- மதுரை



05-02-2022 அன்று மதுரையில் பேரவையின் தென்மண்டலச் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இச்செயல் வீரர்கள் கூட்டத்தில் இருதுணைப் பொதுச் செயலாளர்களான தோழர் ஆ.சிங்கராயர், தோழர் சிற்பி செல்வராஜ், முதன்மைச் செயலாளர் தோழர் புலேந்திரன், கொள்கை பரப்புச் செயலாளர் ரவிச்சந்திரன், மதுரை - திண்டுக்கல் - நெல்லை - சிவகங்கை மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பேரவையின் அடுத்த கட்ட நகர்வு குறித்துக் கலந்துரையாடினார்கள்.

## பரப்புரை தொடங்கினார் சுபவீ




இராமநாதபுரத்தில் இருந்து உள்ளாட்சித் தேர்தல் பரப்புரையைத் தொடங்கினார் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

## காரைக்குடியில் பரப்புரை



ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com

மின் அஞ்சல்: karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# இது எங்கள் உரிமைப் போர்

**காசு. நாகராஜன்**

வரும் காலம் கணினியுகம் என்பதை அறிந்து 30 ஆண்டுகளுக்கும் முன்பே மேல்நிலைக் கல்வியிலேயே கணினிக் கல்வியை இந்தியாவிலேயே முதன் முறையாக அறிமுகம் செய்தவர் கலைஞர். அப்படித்தான் மேல்நிலைக்கல்வியில் அறிவியல் படித்த மாணவர்கள் மருத்துவம் படிக்க இந்தியாவிலேயே ஒற்றைச்சாளர முறைக் கலந்தாய்வை நடைமுறைப் படுத்தினார் கலைஞர். அதுதான் இன்றைக்கு குக்கிராமங்கள் வரை சிறப்பான சுகாதாரக் கட்டமைப்பை தமிழ்நாட்டில் உருவாக்கியிருக்கிறது.

இப்போது பன்னிரண்டாம் வகுப்புப் பாடமே தேவையில்லை நாங்கள் சொல்லுகிறப் பாடத்தைத் தனியார் கோச்சிங் சென்டரில் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலுத்தி, எவ்வளவு காலம் வேண்டுமானாலும் படித்துத் தேர்வானால் போதும், மருத்துவம் படிக்க முடியும் என்கிற நீட் தேர்வைக் கல்வி சமூகரீதியாக மட்டுமல்ல பொருளாதார ரீதியாகவும் பின் தங்கியிருக்கிற யாராலும் நியாயப் படுத்த முடியாது என்கிறோம். இந்தச் சூழ்ச்சியான வர்ணாஸ்ரம தர்மத்தைத்தான் அறிவுத் தீண்டாமை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் சமத்துவ சமூகநீதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அனிதா தனது உயிரை மாய்த்துப் போராடியும் 2017ஆம் ஆண்டு அனிதாவின் பிரேத பரிசோதனை நடக்கும் போதே தமிழ்நாட்டில் நீட்தேர்வும் நடந்தது. இந்தக் கொடுமையைத் தடுப்பதற்குத் துணிவற்று டில்லியின் தாழ்பணிந்து கிடந்த பழனிசாமியும், பன்னீரும்தான் தமிழ்நாட்டில் நீட் தேர்வு நுழையக் காரணமான சமூக அநீதிக் குற்றவாளிகள் என்பதை அவர்கள் மறுக்கலாம் ஆனால், காலம் குறித்து வைத்திருக்கிறது.



நீட் தேர்வை ஒழிப்போம் என்ற வாக்குறுதியைச் சொல்லி திமுக வெற்றி பெற்றுவிட்டது என்கிறார்கள் எதிர்க்கட்சியினர். வாதத்திற்கு ஒப்புக் கொண்டாலும் நீட் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதானே தமிழ்நாட்டு மக்களின் ஒட்டு மொத்த விருப்ப ! அதனால்தானே திமுக ஆட்சிக்கு வந்தது! அதைத்தானே திமுக அரசும் தமிழ்நாடு சட்டமன்றமும் தீர்மானமாக நிறைவேற்றி சட்டப்படி ஆளுநருக்கு அனுப்பி வைத்தது! இந்தத் தீர்மானத்தைத்தானே அதிமுகவும் ஆதரித்தது!

142 நாட்களுக்குப் பிறகு ஆளுநர் இந்தத் தீர்மானத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிறார். முறையாக இந்தத் தீர்மானத்தை அவர் குடியரசுத் தலைவருக்குத்தான் அனுப்பியிருக்க வேண்டும். மாறாக நமக்கே அனுப்பிவிட்டுப் பாகுபாடு பற்றியும் கிராமப்புற மாணவர்கள் பற்றியும் கண்ணீர் வடித்திருக்கிறார் ஆளுநர். இதை நீலிக்கண்ணீர் என்பதா, முதலைக் கண்ணீர் என்பதா, என்பதை மக்கள் முடிவு செய்வார்கள்.

உண்மையிலேயே சமூகநீதியின் மீதும், நீட் எதிர்ப்புக் குரலின் மீதும் அதிமுகவிற்கு அக்கறை இருந்திருக்குமானால், அவர்கள் ஆளுநரின் செயலை அல்லவா கண்டித்திருக்க வேண்டும்? மாறாக ஆளுநரின் சட்டவிரோத செயல்பாட்டிற்கு வெஞ்சாமரம் வீசியபடி திமுகவைக் கண்டிக்கிறார்கள் என்றால், சமூகநீதிக்கான இயக்கங்கள் இந்தக் கும்பலை அடையாளம் கண்டு புறந்தள்ள வேண்டும்.

1972 இல் டில்லியின் சூழ்ச்சியால் பிரசவித்து 1987இல் அதே டில்லியின் தயவால் காப்பாற்றப்பட்டு 2016இல் மீண்டும் அதே டில்லியின் ரகசியத் தொடர்புகளால் பாதுகாக்கப்பட்ட கட்சிதான் அதிமுக. இப்போது திருவாளர்கள் பழனிசாமியும் பன்னீரும் சமூகநீதிக்கு எதிராகப் பேசுவதோ, நீட்டை ஆதரிப்பதோ, ஆளுநரைப் பாதுகாக்க முயற்சிப்பதோ வியப்பானதில்லை. இவர்கள் வடவர்களின் வழியில் வரலாற்றைத் திரிப்பதும் வியப்பில்லை.

இந்த நீட் தேர்வு முறை எங்கள் கல்வியின் கட்டமைப்பையும், சுகாதாரக் கட்டமைப்பையும் மட்டுமல்ல நூற்றாண்டுகளாக நாங்கள் கட்டிக் காத்து வருகிற சமூகக் கட்டமைப்பையே சிதைக்கிறது. நாங்கள் மானமும் அறிவும் மனிதருக்கு அழகு என்று சொன்ன பெரியாரின் வார்ப்புகள்! எங்கள் அடையாளத்தை சிதைக்கும் பகைவரின் முயற்சியை சினங்கொண்டு தடுக்கும் போரில் சமரசமின்றிச் சமராடுவோம் ! எனவே நீட் தேர்வை மட்டுமல்ல சமூகநீதிக்கு எதிரான எந்த ஒரு சூழ்ச்சியையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று ஓங்கி முழங்கியிருக்கிறார் நமது முதல்வர்! இதுதான் நீதிக்கட்சியின் நீட்சியான முழக்கம் !

நமது பணி நமக்கான உரிமைகளைக் காக்கும் பணி ! போராளிகள் எப்போதும் புல்லுருவிகளைக் கண்டு அஞ்சுவதில்லை என்பதுதான் வரலாறு ! வரலாற்று நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வாழ்க ! வாழ்க !

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian